வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 11.06.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

மத்திய அமைச்சர்கள் பலரும் இன்று தத்தம் அலுவல் பொறுப்புகளை, முறைப்படி ஏற்றுக் கொண்டுள்ளனர்.

சர்வதேச யோகா தினம் நெருங்கி வரும் நிலையில், பிரதமர் திரு நரேந்திர மோடி சமூக ஊடகம் மூலம், யோகா பற்றிய உலகளாவிய ஆர்வத்தை தூண்டி உள்ளார்.

புதுச்சேரியில், பாதாள சாக்காடை மூலம் விஷவாயு பரவாமல் தடுக்க எல்லா பகுதிகளிலும் ஆய்வு மேற்கொள்ளப்படும் என முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

நீட் தேர்வு அடிப்படையில் இளங்கலை மருத்துவ மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு நடைமுறைகளை மேற்கொள்ள தடையில்லை என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

*அலுவல் பொறுப்பு 1* (17)

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று புதுடெல்லியில் உள்துறை அமைச்சகத்தின் அலுவல் பொறுப்பை, கூட்டுறவு அமைச்சகத்தின் அலுவல் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார். மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சராக திருமதி அன்னப்பூர்ணா தேவியும் இன்று அலுவல் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டார். திரு ஷிவ்ராஜ் சிங் சவுகான் மத்திய வேளாண் அமைச்சராக, அலுவல் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்க பிரதமர் திரு நரேந்திர மோடி உறுதி பூண்டுள்ளதாகவும், அரசு இதற்கு தொடர்ந்து பாடுபடும் என்றும் கூறினார். விவசாயிகளின் நலன்களை மேம்படுத்த அமைச்சகம் முன்பை விட அதிக வேகத்தில் செயல்படும் என்றும், அமைச்சகம் எட்ட வேண்டிய இலக்குகள்

பற்றிய சங்கல்ப பத்திரம், இன்றைய தினமே அதிகாரிகளுக்கு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். திரு ஹர்திப் சிங் புரி, மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சராகவும், திரு கஜேந்திர சிங் ஷெகாவத் மத்திய கலாச்சாரத் துறை அமைச்சராகவும் அலுவல் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் முழுமையாக பங்களிக்க

*அலுவல் பொறுப்பு 2 (18)*

கலாச்சார அமைச்சகம் உறுதி பூண்டுள்ளதாக திரு ஷெகாவத் தெரிவித்தார். மத்திய சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் துறை அமைச்சகத்தின் அலுவல் பொறுப்பை திரு ஜிதன் ராம் மாஞ்சி ஏற்றுக் கொண்டார். சட்டம் மற்றும நீதித் துறைக்கான தனிப் பொறுப்புடன் கூடிய இணையமைச்சர் திரு அர்ஜுன் ராம் மேக்வால், அலுவல் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், நிலுவையில் உள்ள வழக்குகளை விசாரித்து முடிக்க அமைச்சகம் உயர் முன்னுரிமை அளிக்கும் என்றார். மத்திய தகவல் தொடர்புத் துறை அமைச்சராக திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா அலுவலர் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையில் இத்துறை புரட்சிகரமான பல மாற்றங்களை சந்தித்து இருப்பதாகவும், பிரதமர் மற்றும் 140 கோடி இந்தியர்களின் எண்ணங்களை நிறைவேற்ற இயன்றவரை சிறப்பாக பாடுபடுவேன் என்றும் அவர் கூறினார். திரு கிரண் ரிஜிஜு நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சராகவும், திரு மனோகர் லால் மத்திய மின்சாரத் துறை அமைச்சராகவும், திரு கிரிராஜ் சிங் ஜவுளித் துறை அமைச்சராகவும் அலுவல் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். மத்திய சுகாதாரத் துறை அமைச்சராக திரு ஜே பி நட்டாவும் இன்று அமைச்சகப் பொறுப்பை ஏற்று கொண்டார். திருமதி அனுபிரியா பட்டேல், திரு ஜே பி

*அலுவல் பொறுப்பு 3 (18)*

கண்பத்ராவ் ஆகிய இணை அமைச்சர்களும் உடனிருந்தனர். மத்திய தகவல் – ஒலிபரப்புத் துறை அமைச்சராக, திரு அஷ்வினி வைஷ்ணவ், தகவல் – ஒலிபரப்புத் துறை இணை அமைச்சராக டாக்டர் எல் முருகன் ஆகியோரும் அலுவல் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். பின்னர் திரு அஸ்வினி வைஷ்ணவ் செய்தியாளர்களிடம் பேசுகையில், பிரதமர் திரு நரேந்திர மோடி கடந்த 10 ஆண்டுகளில் மக்களின் வாழ்வில் மிகப் பெரிய மாற்றம் கொண்டு வந்து இருப்பதாகவும், நாட்டிற்கு சேவை புரிய மக்கள் திரு நரேந்திர மோடியை மீண்டும் ஆசிர்வதித்து இருப்பதாகவும் கூறினார்.

பிரதமர், தம் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக டாக்டர் எல் முருகன் தெரிவித்தார். அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான பாலமாக திகழும் தகவல்-ஒலிபரப்பு அமைச்சகம், அரசின் கொள்கைகளை

மக்களுக்கு எடுத்துச் செல்வதில் முக்கிய பங்காற்றுவதாக அவர் கூறினார். ஏழைகளின் நலனை மேம்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளதாகவும், கிராமப்புறங்கள் மற்றும் நகர்புறங்களில் 3 கோடி வீடுகளை கட்ட அமைச்சரவை முடிவு செய்திருப்பதே இதற்கு சான்றாகும் என்றும் அவர் தெரிவித்தார். அமைச்சகத்தில், தகவல் ஒலிபரப்புத் துறை செயலர் திரு சஞ்சய் ஜாஜூ, மற்றும், பல்வேறு ஊடகப் பிரிவுகளை சேர்ந்த மூத்த அதிகாரிகள் அமைச்சர் மற்றும் இணை அமைச்சரை வரவேற்றனர்.

*மோடி ே□ாகா* (15)

சர்வதேச யோகா தினம் நெருங்கி வரும் நிலையில், பிரதமர் திரு நரேந்திர மோடி உலக அளவில் யோகா பற்றிய ஆர்வத்தை தூண்டி உள்ளார். காலத்தை வென்று நிற்கும் யோகா, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை கொண்டாடும் கலை என்று சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறியுள்ளார். பலதரப்பட்ட பூகோள மற்றும் கலாச்சார பின்புலங்களுக்கு இடையில் பாலமாக செயல்படும் அபார ஆற்றல் யோகாவிற்கு உண்டு என்றும், முழுமையான நல வாழ்வைத் தேடும் வேட்கையில், உலகெங்கிலும் கோடிக் கணக்கான மக்களை யோகா ஒருங்கிணைத்து இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். யோகாவை வாழ்க்கையின் ஒருங்கிணைந்த பகுதியாக மாற்றிக் கொள்ளவும், மற்றவர்களையும் இதில் ஊக்குவிக்கவும் ஒவ்வொருவரும் உறுதி ஏற்க வேண்டும் என திரு நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார். பல்வேறு ஆசனங்கள் மற்றும் அவற்றின் நன்மைகள் பற்றிய வீடியோக்களின் தொகுப்பு ஒன்றையும் பிரதமர் பகிர்ந்து கொண்டுள்ளார். சர்வதேச யோகா தினம் ஆண்டுதோறும் ஜூன் 21 ஆம் தேதி கொண்டாடப் படுகிறது.

*வரி பங்கீடு* (8)

28 மாநிலங்களுக்கான மேலும் ஒரு தவணை வரிப் பகிர்வாக மத்திய அரசு நடப்பு மாதத்தில் 1 லட்சத்து, 39 ஆயிரத்து, 759 கோடி ரூபாய் விடுவித்துள்ளது. இதனால் மாநில அரசுகள் மூலதன செலவுகளை அதிகரிக்கவும், வளர்ச்சியை துரிதமாக்கவும் ஏதுவாகும் என்று நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது. மாநிலங்களுக்கான மத்திய அரசின் வரிப் பகிர்வு பட்டியலில் அதிகபட்சமாக உத்திரபிரதேசத்திற்கு 25 ஆயிரம் கோடி ரூபாய் நிதி அனுமதிக்கப் பட்டுள்ளது. அதற்கு அடுத்தபடியாக, பீகார் மற்றும் மத்திய பிரதேசத்திற்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

*விஷவாயு* 1 (18)

புதுச்சேரி ரெட்டியார்பாளையம் புதுநகரில், இன்று வீட்டு கழிவறையில் ஏற்பட்ட விஷவாயு கசிவினால் 3 பெண்கள் உயிரிழந்தனர். மோசமான நிலையில், மேலும் இருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். புதுநகர் பகுதியில் வீடுகளின் கழிவறைக் குழாய்கள் பாதாள சாக்கடை

மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்துடன் ஒருங்கிணைக்கப் பட்டுள்ள நிலையில், பாதாள சாக்காடை குழாய்களில் உற்பத்தியான விஷவாயு எதிர் திசையில் பாய்ந்து, வீட்டு கழிவறைகள் மூலம் கசிந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. சம்பவம் குறித்து தகவல் கிடைத்தவுடன் முதலமைச்சர் திரு ரங்கசாமி, பொதுப்பணித்துறை அமைச்சர் திரு லட்சுமிநாராயணன் ஆகியோர் சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு விரைந்து வந்து பார்வையிட்டனர். முதலமைச்சர் திரு ரங்கசாமி சட்டப்பேரவையில் உள்ள தமது அலுவலகத்தில் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், சம்பவம் குறித்து ஆய்வு மேற்கொள்ள, மாவட்ட ஆட்சியர் மற்றும் பொதுப் பணித்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிடப் பட்டுள்ளதாகவும், விஷவாயு பரவாமல் தடுக்கும் வகையில், புதுச்சேரியின் எல்லா பகுதிகளிலும் ஆய்வு மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார். விஷவாயு தாக்கி இறந்து போன 2 முதியவர்களின் குடும்பங்களுக்கு, தலா 20 லட்சம் ரூபாயும், இறந்த

*விஷவாயு* 2 (15)

சிறுமியின் குடும்பத்தினருக்கு 30 லட்சம் ரூபாயும் வழங்கப்படும் என அவர் தெரிவித்தார்.

முன்னதாக, கள ஆய்வின் போது, அமைச்சர் திரு லட்சுமி நாராயணன் செய்தியாளர்களிடம் பேசுகையில், புதுச்சேரியின் இதர பகுதிகளில் உள்ள அதே முறையில் தான் புதுநகர் பகுதியிலும் பாதாள சாக்காடை செயல்படுவதாகவும், இணைப்பு குழாய்கள், தவறான முறையில் பொருத்தப் பட்டிருக்கலாம் என முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் கூறினார். போதிய காற்றோட்ட வசதியுடன், புதிய இணைப்புகள் அரசு செலவில் உடனடியாக செய்துத் தரப்படும் என்றும் அவர் தெரிவித்தார். இதற்கிடையே, புதுநகர் பகுதிக்கு உட்பட்ட 10 தெருக்களில் மக்கள் வெளியேற்றப்பட்டு, அனைவரும் முக கவசம் அணிய வலியுறுத்தப்பட்டனர். சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் ஸ்ரீராமுலு தலைமையில் மருத்துவ குழுவினர் அப்பகுதிக்கு சென்று லேசான மயக்கத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்தனர். 20 க்கும் மேற்பட்ட செவிலியர்கள் வீடு வீடாக சென்று மக்களின் உடல் நிலை குறித்து கேட்டறிந்தனர்.

*நீட்* (12)

நீட் தேர்வு அடிப்படையில் இளங்கலை மருத்துவ மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு நடைமுறைகளை மேற்கொள்ள தடையில்லை என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. கடந்த மே 5 ஆம் தேதி நடைபெற்ற நீட் தேர்வை ரத்து செய்ய கோரும் மனு ஒன்றின் மீது, தேசிய தேர்வுகள் முகமை

மற்றும் பிறரிடம் நீதிமன்றம் விளக்கம் கேட்டுள்ளது. இம் மனு மீதான அடுத்த கட்ட விசாரணைகள், நிலுவையில் உள்ள இதே போன்ற மற்றொரு மனுவுடன் சேர்த்து, அடுத்த மாதம் 8 ஆம் தேதி நடைபெறும் என்றும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. நீட் தேர்வில் நடந்ததாக கூறப்படும் முறைகேடுகள் மற்றும் மோசடிகள் குறித்து, முழுமையான விசாரணைகளை விரைந்து மேற்கொள்ளக் கோரி இளம் மாணவர்கள் இம் மனுவை தாக்கல் செய்துள்ளனர். நீட் தேர்வு முடிவுகளை திரும்பப் பெற்றுக் கொண்டு, மீண்டும் தேர்வு நடத்த வேண்டும் என்றும் மனுவில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

*யுஜிசி* (10)

உயர் கல்வி நிறுவனங்களில் அடுத்த ஆண்டு முதல், ஆண்டுக்கு இரு முறை மாணவர் சேர்க்கை நடத்தப்படுவதை அனுமதிக்க, பல்கலைக் கழக மானியக் குழு கொள்கை அளவில் முடிவு எடுத்துள்ளது. தற்போது ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே மாணவர் சேர்க்கை மேற்கொள்ளப்படும் நிலையில், தகுதி தேர்வு முடிவுகள் வெளியாவதில் காலதாமதம் உள்ளிட்ட பிரச்சனைகளால் உரிய நேரத்தில் உயர் கல்வியில் சேர முடியாமல் போகும் மாணவர்கள் பலர், புதிய முடிவினால் பயன் பெறுவார்கள் என்று யூஜிசி தலைவர் பேராசிரியர் ஜெகதீஷ்குமார் தெரிவித்துள்ளார். உயர் கல்வியில் சேர ஓராண்டு காலம் காத்திருக்க வேண்டிய நிலை தவிர்க்கப்படுவதால், மாணவர்கள் ஊக்கம் இழப்பதை தவிர்க்க முடியும் என்றும் அவர் கூறினார்.

*சந்திரபாபு* (14)

ஆந்திரபிரதேசத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியின் சட்டப் பேரவைக் குழு தலைவராக, தெலுங்கு தேசம் கட்சியின் தலைவர் திரு சந்திரபாபு நாயுடு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். தெலுங்கு தேசம், ஜனசேனா மற்றும் பிஜேபி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இடையே, விஜயவாடாவில் நடைபெற்ற கூட்டத்தில் இதற்கான முடிவு ஒரு மனதாக மேற்கொள்ளப்பட்டது. இக் கூட்டத்தில், திரு சந்திரபாபு நாயுடு வின் பெயரை, ஜனசேனா கட்சியின் தலைவர் திரு பவன் கல்யாண் முன்மொழிய, கூட்டணி எம்எல்ஏ கள் அனைவரும் அதை ஏற்றுக் கொண்டனர். 175 உறுப்பினர் ஆந்திர சட்டமன்றத்திற்கு அண்மையில் நடைபெற்ற தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி 164 தொகுதிகளில் அபார வெற்றி பெற்றதும் குறிப்பிடத் தக்கது. இதற்கிடையே, ஜனசேனா கட்சி உறுப்பினர்கள், அக்கட்சியின் தலைவர் திரு பவன் கல்யாணை, கட்சியின் சட்டமன்ற குழு தலைவராக தேர்ந்தெடுத்துள்ளனர். ஆந்திர சட்டமன்றத்தில் ஜனசேனா கட்சிக்கு 21 உறுப்பினர்கள் உள்ளனர்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

மத்திய அமைச்சர்கள் பலரும் இன்று தத்தம் அலுவல் பொறுப்புகளை, முறைப்படி ஏற்றுக் கொண்டுள்ளனர்.

சர்வதேச யோகா தினம் நெருங்கி வரும் நிலையில், பிரதமர் திரு நரேந்திர மோடி சமூக ஊடகம் மூலம், யோகா பற்றிய உலகளாவிய ஆர்வத்தை தூண்டி உள்ளார்.

புதுச்சேரியில், பாதாள சாக்காடை மூலம் விஷவாயு பரவாமல் தடுக்க எல்லா பகுதிகளிலும் ஆய்வு மேற்கொள்ளப்படும் என முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

நீட் தேர்வு அடிப்படையில் இளங்கலை மருத்துவ மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு நடைமுறைகளை மேற்கொள்ள தடையில்லை என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.